முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1336

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

27.05.2023, சனிக்கிழமை

1. சரவணச்சுடரேற்றி கலியுகத்தில்
   சகலருக்கும் ஞானம் அருளவேண்டி
   அறமாக கலியுகத்தில் உலகோர்க்கு வரமாக
   அற்புதம் நிகழ்த்த அவதாரம் எடுத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி

(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 13 ம் நாள், 27.05.2023, சனிக்கிழமை)

   வரமாக உன்வழி உலகமக்கள்
   வந்து சேரவும் புண்ணியபலம் வேண்டுமப்பா
3. அப்பனே அவ்வாறு புண்ணியவான்கட்கு
   ஆறுமுகன் யான் ஞானம் அருளி உன்வழி
   ஆற்றல்பட அரங்கன் உன் அவதார நோக்கம்
   வகைபட நிறைவேற அருள்புரிவேன்
4. வரமாக அரங்கன் உன் திருவடி பற்றி
   வையகத்தார் தொடர்ந்து வந்தால்
   தரமான ஞானவான்கள் படைகள் பெருகி
   தரணியில் ஞானிகள் ஆட்சியதும்
5. தவராஜன் உன் வேண்டலாய் நிறைவேறும்
   தரணிக்கு பாதுகாப்பு மிகுந்து நன்கு
   தக்கபடி பேரிடர் பிறதுன்பமில்லாத
   தகுதிவாய்ந்த ஞானலோகமாக மாற்றம் பெறக்கூடும்
6. கூடவே அரங்கன் உன்னுள் யானிருந்து
   குவலயத்தைக் காக்கும் மகாசக்தியாக ஈடேற்றம் தொடர்ந்து செய்து வருதல்காண
   யுகத்தார் உன்வழி வந்தால் போதும்
   உயர்வான மாற்றம் சடுதி நிகழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–